Sri MANAKULA VINAYAGAR
Medical college and Hospital
*Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry- 605107*

MANA - KURAL
*The official podcast of SMVMCH*

**Name of Resource person: Dr.A.Arunakiri Raja**

**Department: Pathology**

**Podcast Title: Cervical Cancer - Screening & Awareness**

**Category: Public awareness**

வணக்கம், நான் டாக்டர்.அ.அருணகிரி ராஜா நோயியல் துறை, ஸ்ரீ மணகுல விநாயகர் மருத்துவ கல்லூரி. இந்த ஒளிப்பதிவில் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பற்றி ஒரு சிறு தொகுப்பை கேட்க உள்ளோம்.

உலகம் முழுவதிலும் அதிக மக்களை பாதிக்கும் புற்றுநோய் வகைகளில் நான்காவது இடத்தில் இருப்பது செர்விக்கல் கேன்சர், அதாவது பெண்களின் கர்ப்பபைவாயில் ஏற்படும் புற்றுநோய். அதே போல, கேன்சர் பாதிப்பால் இறப்பவர்களின் எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்காக இருக்கிறது. இந்தியாவில், நான்கு கேன்சர் நோய்களுக்கு ஒருவருக்கு செர்விக்கல் கேன்சர் பாதிப்பு உள்ளது. அதிர்ச்சியூட்டும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் 1.5 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் இந்த வகை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்த புள்ளிவிவரங்கள் செர்விக்கல் கேன்சர் எவ்வளவு ஆபத்தானவை என்று குறிப்பிடுகின்றன. ஏனென்றால் மற்ற புற்றுநோய்களை போல் அல்லாமல், எதிர்காலத்தில் கர்பபவாய் புற்றுநோயால் பெண்களைக் கண்டறிந்து ஆரம்ப நிலையிலேயே புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை தெரிந்து கொள்ள ஸ்கீரினிங் முறைகள் உள்ளன. இவற்றை தவிர, 99 சதவீதத்திற்கு அதிகமான கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்களுக்கு காரணமான HPV எதிரான தடுப்பூசிகளும் உள்ளன.

HPV, பெரும்பாலான புற்றுநோய்களை ஏற்படுத்தும் முக்கியக் காரணியாக இருக்கிறது. நோய்தொற்று ஏற்பட்ட காலத்திலிருந்து, புற்றுநோய் உருவாக 15 முதல் 20 ஆண்டுகள் ஆகும். புற்றுநோய் பாதிப்படையும் அதிக ஆபத்தில் உள்ள பெண்களை அடையாளம் காண இது மிகப்பெரிய கால அளவை வழங்குகிறது. 100 வகைகளும் HPV மாறுபாடுகள் உள்ளன. அவற்றில் சுமார் 14 மாறுபாடுள்ள (variants) புற்றுநோய்

உண்டாக்கும் அதிக ஆபத்தைக் கொண்டுள்ளது.

பெரும்பாலான பெண்களில் HPV நோய்தொற்று ஏற்பட்ட 2 ஆண்டுகளுக்குள் முழுவதுமாக நீங்கிவிடும். ஆனால், அதிக சக்திவாய்ந்த variants தாக்கும் போது, வைரஸின் தாக்கம் 2 வருடங்களுக்கும் மேலாக உடலில் நீடித்து, உயிரணுக்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு கர்ப்பப்பை வாய் வழியே புற்று நோயாக மாறும்.

கர்ப்பப்பை வாய் புற்றுநோய்கான அறிகுறிகள்:

1. அதிகப்படியான ரத்தபோக்கு
2. மெனோபாஸில் இருக்கும் பெண்களுக்கும் ரத்தப்போக்கு
3. தீவிரமான முதுகுவலி
4. பிறப்புறுப்பிலிருந்து திரவம் வெளியேறுதல்.

கர்ப்பப்பை வாய் புற்றுநோய் முற்றிலும் தடுக்கக்கூடியது.

பாதிப்பு ஏற்படாமல் தடுக்கக்கூடிய மிகவும் அரிதான கேன்சர் வகைகளில் செர்விக்கல் கேன்சர் முதன்மையானது. இதற்கு குறிப்பிட்ட இடைவெளியல் PAP Smear என்ற பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இந்த சோதனை, கர்ப்பப்பை வாயில் இருக்கும் செல்கள் ஆரோக்கியமாக இருக்கின்றதா அல்லது கேன்சரால் பாதிக்கப்பட்டு இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள உதவும்.

கர்ப்பப்பை வாய் புற்றுநோயை தடுப்பது எப்படி ?

கர்ப்பப்பை வாய் புற்றுநோயைத் தடுக்க HPV தடுப்பூசிகள் உள்ளன. 9 முதல் 14 வயதிலான சிறுமிகளுக்கு 2 டோஸ் தடுப்பூசிகளை 6 மாத இடைவெளியில் கொடுக்கலாம். பெண்கள் 15 முதல் 45 வயது வரையில் 3 டோஸ்கள் செலுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

இதன் மூலம் நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால் மருத்துவ முறையிலும் அறுவை சிகிச்சை முறையிலும், வைத்திய முறைகள் இருந்தாலும், இதை வருமுன் காப்பது சாலச்சிறந்தது.

Signature of the Resource Person

Signature of the HOD

PROFESSOR & HEAD
DEPARTMENT OF PATHOLOGY
SMVMC & H
PUDUCHERRY